பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண்.470 நாள்: 12.09.2026

மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள், வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, மணலி மற்றும் மாதவரம் மண்டலங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் இன்று (12.09.2026) வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, மணலி மற்றும் மாதவரம் மண்டலங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மாநகராட்சி ஆணையாளர் அவர்கள், வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, மாதவரம் மண்டலம், வார்டு-24க்குட்பட்ட மாதவரம்-ரெட்ஹில்ஸ் சாலையில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி மற்றும் புழல் உபரிநீர் கால்வாயில் நடைபெற்று வரும் தூர்வாரும் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இதனைத் தொடர்ந்து, ஸ்ரீ பாலாஜி நகர் 3ஆவது பிரதான சாலைப் பகுதியில் அம்பத்தூர் மற்றும் கொரட்டூர் ஏரியில் இருந்து வரும் உபரி நீர் கால்வாய் சேரும் பகுதியினைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர், மணலி மண்டலம், வார்டு-18க்குட்பட்ட சி.பி.சி.எல். பாட்டில் பாலப் பகுதி மற்றும் ஆமுல்லாவயில் பாலப் பகுதியில் உள்ள புழல் உபரிநீர் கால்வாயினைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, ஆகாயத் தாமரைகள், செடிகள் மற்றும் தூவாரும் பணிகளை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளின்போது, மாநகராட்சி, சென்னை குடிநீர் வாரியம், நீர்வளத்துறை, பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை உள்ளிட்ட சேவைத் துறைகளின் அலுவலர்கள் உடனிருந்தனர்.

செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,

பெருநகர சென்னை மாநகராட்சி.